Australian Government
Attorney-General's Department

# பொதுமக்கள் ஆலோசனை

# கட்டாயத் திருமணத்திற்கான குடிமக்கள் (சிவில்) பாதுகாப்புகளையும் பரிகாரங்களையும் மேம்படுத்துதல்

## தனியுரிமை சேகரிப்பு அறிவித்தல் மற்றும் சம்மதப் படிவம்

கட்டாயத் திருமணத்திற்கான சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக்கு ஆதரவளிப்பதற்கு உங்களுடைய சொந்தத் தகவல்கள் சிலவற்றைச் சட்டமா அதிபர் திணைக்களம் (திணைக்களம்) சேகரிக்கிறது. உங்களுடைய தனிப்பட்டதகவல்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பு என்பன எமக்கு முக்கியமானதாகும் மேலும் சட்டத்தால் பாதுகாப்பளிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய தனியுரிமைக் கோட்பாடுகள்)( *Australian Privacy Principles*, APPs) உட்பட தனியுரிமைச்சட்டம் (*Privacy Act 1988)*, ஐத் திணைக்களம் கடைப்பிடிக்கிறது. ஆட்களுடைய தனிப்பட்ட தகவல்களை நாம் எவ்வாறு கையாள்வது, மற்றும் பராமரிப்பதற்கான தராதரங்கள், உரிமைகள் மற்றும் கடமைகளை APP கள் அமைத்துள்ளன. தனிப்பட்ட தகவல்கள் சேகரித்தல், சேர்த்துவைத்தல், பாவித்தல், வெளியிடுதல், தரநிர்ணயம் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை நாம் எவ்வாறு செய்கிறோமோ அதேபோல, உங்களது தனிப்பட்ட விடயங்களைப் பார்க்க அல்லது திருத்தம்செய்வதற்கு உங்களுக்கு இருக்கும் உரிமைகள் இதனுள் அடங்கும்.

**உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு சேகரிக்கப்படும்**

- மெய்நிகரில் (ஆன்லைன்) கேள்விக்கொத்தினைப் பூர்த்திசெய்வதன்மூலம் இந்த ஆலோசனையில் நீங்கள் பங்குபற்றினால், நீங்கள் எந்தவித தனிப்பட்ட தகவல்களையும் வழங்கவேண்டியதில்லை.
  நீங்கள் அவ்வாறு வழங்கினால், இது தன்னார்வ அடிப்படையில் ஆனதாகும்.
- நீங்கள் திணைக்களத்திற்கு மின்னஞ்சல் செய்தால், உங்களுடைய பெயரை வழங்கவிரும்பினால், மின்னஞ்சல் விலாசம் குறித்த பதிவு திணைக்களத்தில் இருக்கும்,
- ஆலோசனைக்கு உங்களது கருத்து (பின்னூட்டம்) அல்லது சமர்ப்பிப்பு போன்றவற்றின் ஒரு பகுதியாக, தனிப்பட்ட அல்லது உணர்வைப் பாதிக்கும் விடயங்களை வழங்க நீங்கள் விரும்பலாம். நீங்கள் அவ்வாறு வழங்கினால், இது தன்னார்வ அடிப்படையில் ஆனதாகும்.
- இலக்குவைக்கப்பட்ட ஆலோசனைக்கூட்டத்தில் நீங்கள் பங்குபற்றினால், ஓர் அழைப்பிதழை வழங்கும் நோக்கத்திற்காக உங்களின் மின்னஞ்சல் விலாசத்தையும், நீங்கள் வழங்க விரும்பினால்,அவ்வாறே உங்களின் பெயரையும், இந்தத் திணைக்களம் சேகரிக்கும். புனைபெயரைப் பாவித்தும் நீங்கள் இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் பங்குபற்றலாம்.
- உங்களுக்கு உரைபெயர்ப்பு சேவைகள் தேவைப்பட்டால், அல்லது ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஒரு மொழியில் உங்களுடைய சமர்ப்பிப்பினை வழங்கினால், உங்களுடைய எழுத்திலான அல்லது வாய்மொழியிலான கருத்துகளில்

வெளியிடப்பட்ட உங்களது தனிப்பட்ட தகவல்களை, ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள மூன்றாம் தரப்பினர் அணுகக்கூடும்.

**உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை நாங்கள் சேகரிக்காவிட்டால்**

உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை நாங்கள் சேகரிக்காவிட்டால், மெய் நிகரில் அல்லது நேரடியாக, இலக்குவைக்கப்பட்ட கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கு உங்களை அழைப்பதற்கு உங்களைத் தொடர்புகொள்ள எமக்குள்ள ஆற்றலை இது பாதிக்கலாம். இந்த ஆலோசனையில் நீங்கள் வழங்கும் கருத்துகளின் ஒரு அம்சத்தைத் தெளிவுபடுத்த உங்களுடன் தொடர்புகொள்ள எமக்குள்ள ஆற்றலையும்கூட இது பாதிக்கலாம்.

உங்களின் பெயரை வழங்குவதற்கு அல்லது புனைபெயரைப் பாவிப்பதற்கு நீங்கள் விரும்பாதுவிட்டால், ஆலோசனையின் ஒரு பகுதியாக நீங்கள் வழங்கும் தகவல்கள் அல்லது பதிவுகளுக்கான உங்களின் அணுகலை நாங்கள் வழங்கமுடியாமல் போகலாம்.

**உங்களின் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும்**

- இலக்குவைக்கப்பட்ட ஆலோசனையில் நீங்கள் நேரடியாக அல்லது மெய்நிகரிலில் பங்குபற்றுவதற்கு உங்களை அழைப்பது உள்ளடங்கலாக, உங்களுடன் கலந்துரையாடுவதற்கு உங்களின் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் உபயோகிப்போம்.
- உங்களுடைய கருத்துகள் பற்றி எம்மிடம் கேள்விகள் இருந்தால், உங்களுடன் தொடர்புகொள்ள உங்களின் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் உபயோகிக்கக்கூடும்.
- எமது இணையத்தளத்தில் உங்களுடைய எழுத்திலான சமர்ப்பணத்தை அல்லது கருத்துகளை வெளியிடுவதற்கு நீங்கள் சம்மதம் வழங்கினால், அதை பகிர்ந்துகொள்வதற்கு எமக்கு உங்களின் இணக்கம் இல்லாதுவிட்டால், உங்களை அடையாளம்காணும் எந்தத்தகவலையும் நீக்கிவிடுவோம்.
- எழுத்திலான சமர்ப்பணம் ஒன்றில் தனிப்பட்ட தகவல்களை நீங்கள் உட்படுத்தி அந்த சமர்ப்பணத்தை வெளியிடுமாறு நீங்கள் இணக்கம் தெரிவித்தால், பின்னர் உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் வெளியிடப்படலாம்.
- மூன்றாம் தரப்பினர் பற்றி தனிப்பட்ட அல்லது உணர்வைப்பாதிக்கும் தகவல்களை நீங்கள் வழங்கினால், அந்த மூன்றாம் தரப்பினரின் சம்மதம் இல்லாமல், உங்களுடைய சமர்ப்பணத்தை வெளியிடுமாறு நீங்கள் உங்களின் இணக்கத்தை வழங்கினாலும்கூட, நாங்கள் வெளியிட மாட்டோம்.
- கட்டாயத்திருமணத்திற்கான சிவில் பாதுகாப்புகளையும், பராமரிப்புகளையும் மேம்படுத்துவதற்கு ஒரு மாதிரியை உருவாக்குவதற்கு இந்தப் பணியில் ஏனைய அரசாங்க முகவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு முன்னர், அறிக்கைகள், சமர்ப்பிப்புகள், அல்லது தனிப்பட்ட தகவல்களை நாங்கள் அடையாளம் காண்போம். மூன்றாம் தரப்பினரின் தனிப்பட்ட தகவல்கள் இதற்குள் அடங்கும்.
- ஆலோசனைக்கு உங்களுடைய கருத்துகளின் ஒரு பகுதியாக உங்களின் தனிப்பட்ட தகவல்களையும் நீங்கள் பகிர்ந்துகொள்ளலாம். கட்டாயத்திருமணத்தில் அல்லது அதன் அபாயத்தில் இருக்கும் தனிப்பட்டவர்களுக்கான கட்டாயத்திருமண சிவில் பாதுகாப்புகளையும், பரிகாரங்களையும் மேம்படுத்துவதற்கு ஒரு மாதிரியை

உருவாக்குவதன்மூலம், இது அடங்கலாக, ஒருங்கிணைந்த ஒரு தேசிய பிரதிபலிப்பினூடாக கட்டாயத்திருமணப் பிரச்சினையைச் சமாளிக்க அனைத்து ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் பணிகளையும் இது அறிவிக்கும்.
- இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத எந்த இரண்டாந்தர நோக்கத்திற்காகவேனும், உங்களின் தனிப்பட்ட தகவல்களைப் பாவிப்பதற்கு உங்களின் சம்மதத்தை நாங்கள் நாடுவோம்.

**உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை யாருக்குத் தெரிவிக்கப்படலாம்**

- எழுத்திலான சமர்ப்பணம் ஒன்றில் தனிப்பட்ட தகவல்களை நீங்கள் உட்படுத்தி அந்த சமர்ப்பணத்தை வெளியிடுமாறு நீங்கள் இணக்கம் தெரிவித்தால், பின்னர் உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் வெளியிடப்படலாம். உதாரணமாக, சமர்ப்பணத்தின் தலையங்கப் பக்கத்தில் உங்களுடைய பெயரைப் போட்டால், அல்லது உங்களின் சமர்ப்பணத்தின் உரையில் தனிப்பட்ட தகவல்களை உள்ளடக்கினால்,
- இலக்குவைக்கப்பட்ட ஓர் ஆலோசனையில் நேரடியாகவோ அல்லது மெய்நிகரிலோ (ஆன்லைன்) நீங்கள் பங்குபற்றினால், ஆலோசனையின்போது ஏனைய பங்கேற்பாளர்கள் உங்களுடைய பெயரைப் பார்க்கக்கூடியதாகவிருக்கலாம்
  - மெய்நிகர் (ஆன்லைன்) ஆலோசனைகளுக்கு, திணைகளம் Microsoft Teams-ஐப் பயன்படுத்தி ஆலோசனையை நடாத்தும். மெய்நிகர் தளத்திலிருந்து கூட்டங்களை நடாத்தும் நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தகவல்களை Microsoft Teams சேகரிக்கிறது அத்துடன் உங்களின் தனிப்பட்ட தகவல்களைக் கையாளுதல் தொடர்பில், அது தனது கொள்கைகளைக் கொண்டுள்ளது. அவர்களுடைய, இணையத்தளத்தில், அவர்களுடைய தனியுரிமை அறிக்கையைப் பெற்றுக்கொள்ளலாம்.
- உங்களுடைய பெயரைப் பகிர்ந்துகொள்ள நீங்கள் விரும்பாதுவிட்டால், ஆலோசனையில் (மெய்நிகர் மற்றும் நேரில்) கலந்துகொள்ளும்போது புனைபெயர் ஒன்றினை நீங்கள் உபயோகிக்கலாம்.
- கலந்துரையாடலுக்கு உதவும் மூன்றாம் தரப்பினரும் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை அணுகலாம். உங்களுடைய வாய்மொழிமூலமான அல்லது எழுத்திலான கருத்துகளை (பின்னூட்டம்) மொழிபெயர்க்கும்போது அல்லது உரைபெயர்க்கும்போது உங்களின் தனிப்பட்ட தகவல்களை வாசிக்கும் அல்லது செவிமடுக்கும் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்கள் போன்றவர்களை இது உள்ளடக்கும்.
- நீங்களோ அல்லது வேறொரு நபரோ ஒருவேளை தீங்குக்கான ஆபத்தில் இருப்பதாக நாங்கள் கருதுமளவுக்கு நீங்கள் வெளியிடும் தகவல்கள் அமைந்தால், காவல்துறை மற்றும்/அல்லது பிற பொருத்தமான அதிகாரிகளுக்கு இந்தத் தகவலை வெளியிடுவதற்கு நாங்கள் கேட்கப்படலாம்.
- கட்டாயமாக அறிவிக்கவேண்டிய. தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அல்லது சந்தேகிக்கப்படும் ஒரு குற்றத்தை அறிவிப்பதற்கு உங்களின் தனிப்பட்ட தகவலை வெளியிடுமாறும் நாங்கள் கேட்கப்படலாம்.
- தகவல்சுதந்திர (Freedom of Information) கோரிக்கைகளுக்கு உங்களின் தனிப்பட்ட தகவல்களும் உட்படலாம்.

Australian Government
Attorney-General's Department

உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை வெளியிட எமக்குத் தேவையான வேறு ஏதேனும் காரணங்களை நாங்கள் அடையாளம்கண்டால், அவ்வாறு செய்வதற்கு முன்னர உங்களின் எழுத்திலான சம்மதத்தை நாங்கள் கோருவோம்.

**மேலும் தகவல்கள்**

உங்களால் வழங்கப்பட்ட தகவல்களைத் திணைகளம் எவ்வாறு கையாளுகிறது, அத்துடன் பாதுகாக்கிறது என்பதை திணைக்களத்தின் தனியுரிமைக் கொள்கை (Privacy Policy) விபரிக்கிறது. உங்களைப்பற்றி நாங்கள் வைத்திருக்கும் தனிப்பட்ட தகவல்களை அணுகுவதற்கு அல்லது திருத்தம்செய்வதற்கு எவ்வாறு நீங்கள் கேட்கலாம், அத்துடன் தனியுரிமை விசாரணை அல்லது முறைப்பாடு இருந்தால் யாரைத் தொடர்புகொள்ளவேண்டும் என்பதையும் எமது தனியுரிமை கொள்கை விபரிக்கிறது. எமது தனியுரிமைக் கொள்கை குறித்து ஆவணவடிவிலான பிரதி ஒன்று தேவையானால், தயவுசெய்து privacy@ag.gov.au-இல் தனியுரிமை அலுவலரைத் தொடர்புகொள்ளவும்.

கட்டாயத்திருமணத்திற்காக சிவில் பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்களை மேம்படுத்துவது குறித்து பொதுமக்கள் கலந்துரையாடலில் பங்குபற்றுவது தொடர்பில் உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தால், ForcedMarriage@ag.gov.au ஐத் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.